கிண்டி ரேஸ் கோர்ஸ் வளாகத்தில் 6 குளங்கள் வெட்டப்பட்டு,

# 28.75 கோடி லிட்டர் மழை நீரை சேமித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு மேற்கொண்டு தெரிவித்த தகவல்





சென்னை,டிச.5-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் , நேற்று 04.12.2025 டிட்வா புயல் மழையினை முன்னிட்டு, அடையாறு மண்டலம், கிண்டி ரேஸ் கோர்ஸ் வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 4 குளங்களில் நீர் நிறைந்துள்ளதை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 45 ஏக்கர் பரப்பளவில் கோவை மாவட்டத்தில் செம்மொழி பூங்கா ஒன்றினை திறந்து வைத்து, அந்த செம்மொழி பூங்கா இன்றைக்கு கோவை மாவட்டத்திற்கு ஒரு மிக பெரிய அளவிலான புகழை சேர்க்கும் வண்ணம் ஒரு பூங்காவாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. அந்த வகைகளில் சென்னையை பொருத்தவரை தமிழ்நாடு முதலமைசர் அவர்கள் 160.86 ஏக்கர் நிலப்பரப்பை கொண்ட கிண்டி ரேஸ் கோர்ஸ் மைதானத்தை அரசு கையகப்படுத்திவுள்ளது. இந்த 160.86 ஏக்கர் பரப்பளவில் 118 ஏக்கர் நிலபரப்பிளான ஒரு சுற்றுச்சூழல் பூங்கா தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணிகளை தொடங்கிவைத்து, அந்த பணிகள் வேகமாக நடைப்பெற்று வருகிறது. இங்கே நாற்று பண்ணைகள் திறந்து வைக்கப்பட்டு மக்களுக்கு அது விநியோக மையம் ஒன்றும் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் 118 ஏக்கர் நிலபரப்பிலான சுற்றுச்சூழல் பூங்காவில் ஒரு மிக சிறந்த வகையில் புதிதாக 4 குளங்கள் வெட்டி மழைநீர் சேமிக்கின்ற அளவுக்கு பயன்பாட்டிற்கு வந்துள்ளது. ஏற்கேனவே இந்த மைதானத்தில் 2 குளங்கள் இருந்தது. அந்த 2 பெரிய குளங்கள் இன்றைக்கு தூர் வாரி ஆழமாக்கப்பட்டு அகல படுத்தப்பட்டுள்ளது. அதோடு மட்டும் அல்லாது புதிய 4 குளங்கள் வெட்டி சீரமைக்கப்பட்டுள்ளது. 6 குளங்கள் இந்த 118 ஏக்கர் நிலப்பரப்பில் சற்றொப்ப ஒரு 10 சதவீதம் 12 ஏக்கர் நிலப்பரப்பிலான குளங்கள் வெட்டப்பட்டுள்ளது. 24.50 கோடி லிட்டர் மழை நீரை சேர்த்து வைக்ககூடிய அளவுக்கு இன்றைக்கு 6 குளங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு பயன்பாட்டிற்கு வந்துள்ளது. அதோடு மட்டும் அல்லாது அருகில் வேளச்சேரி பெருங்குடி சாலையில் ஆக்கிரமிப்புகளை எல்லாம் அகற்றி ஆறு வழி நீர் பாதை (SIX VENT) ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், அங்கே இருந்த உபரி நிலங்களில் ஒரு 3.50 ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டு பெரிய குளங்கள் வெட்டப்பட்டது. அந்த குளங்களை பொருத்தவரை இன்றைக்கு 4.25 கோடி லிட்டர் மழை நீர் தேக்கி வைக்கும் அளவிற்கு அங்கே குளங்கள் மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஆக கிண்டி ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் அமையபெற்றுள்ள இந்த 12 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாகியிருக்கிற 6 குளங்களில் 24.50 கோடி மழைநீரை சேமிக்க முடியும், வேளச்சேரியில் 3.50 ஏக்கர் நிலப்பரப்பில் வெட்டப்பட்டுள்ள குளங்களில் 4.25 கோடி லிட்டர் மழைநீரை சேமித்து வைக்க முடியும் ஆக ஒட்டு மொத்தமாக 28.75 கோடி லிட்டர் மழை நீரை சேமித்து வைக்க கூடிய குளங்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

சைதாப்பேட்டை, கிண்டி, மடுவின்கரை, ஐந்து பர்லாங்கு சாலை, வேளச்சேரி போன்ற பல்வேறு பகுதிகளில் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன் பெரும் வகையில் இன்றைக்கு நீர் ஆதாரங்கல் உருவாக்கப்பட்டுள்ளது. மழை காலங்களில் மழைநீரை சேமித்து வைப்பதோடு மட்டும் இன்றி கோடை காலங்களில் அவரவர் போர் கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதினால் இந்த பகுதியில் இருப்பவர்கள் எந்த காலங்களிலும் பாதிப்பிற்கு உள்ளாகாமல் இருப்பதற்குரிய நடவடிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த சுற்றுசூழல் பூங்கா உடனடியாக பயன்பாட்டிற்கு வருகின்ற சூழலில் இந்த நீர் ஆதாரங்களை எல்லாம் கோடைகாலங்களில் ஆவி ஆவதை தடுக்கின்ற வகையில் அறிவியல் பூர்வமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று துறை அலுவர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்கள். கிண்டி ரேஸ் கோர்ஸில் அமைக்கப்பட்ட குளத்தின் மூலம் சைதாப்பேட்டை மக்கள் மட்டும் அல்லாமல் வேளச்சேரி மக்களும் பயன்பெறுவார்கள்.

வடகிழக்கு பருவமழை 17.10.2025 அன்று தொடங்கி இன்று காலை 10 மணி வரை 54.8 செ.மீ அளவுக்கு பொழிந்துள்ளது. சென்னையை பொறுத்தவரை 01.12.2025 முதல் 04.12.2025 காலை 10 மணி வரை ஏறத்தாழ 25.4 செ.மீ மழை பொழிந்துள்ளது. அதிகமான மழை பொழிந்துள்ள நிலையிலும் வெள்ள பாதிப்புகள், போக்குவரத்து பாதிப்புகள், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதிக்கப்படாத நிலை உள்ளதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவியல் பூர்வமாக எடுத்த நடவடிக்கைகளும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளுமே காரணமாகும்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர் - மண்டல குழு தலைவர் இரா. துரைராஜ், வேளச்சேரி மேற்குப் பகுதி பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.





சோழிங்கநல்லூர் தொகுதி பள்ளிக்கரணை நாராயணபுரம் ஏரியில் வடகிழக்கு பருவமழையால் ஏரியின் உபரி நீர் முழு கொள்ளளவு எட்டியுள்ள நிலையில் இரண்டு கண் கொண்ட கூடுதல் வடிக்கால்வாய்யில் தண்ணீர் தேங்காமல் வெளியேறி வருவதை பகுதிச் செயலாளர் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., துணை ஆணையர் (தெற்கு) அஃதாப் ரசுல் ஆகியோர் பார்வையிட்டனர். உடன், வட்ட கழக செயலாளர்கள் வ.பாபு, எஃப். ஆரோன் (எ) அரசு, பகுதி துணைச் செயலாளர் வி.வி. குமரேசன், மாவட்ட பிரதிநிதி டி.தேவேந்திரன், எஸ்.செல்வ குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உட னிருந்தனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில்

# பிரதமர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் தமிழ்நாடு அடைந்த பயன் என்ன?

## நாடாளுமன்றத்தில் – தருமபுரி ஆ.மணி கேள்வி!



புதுடெல்லி, டிச.5-

கடந்த 3 ஆண்டுகளில் பிரதமரின் வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் தமிழ்நாடு பெற்ற பயன்கள் என்ன? -என்று நாடாளுமன்றத்தில் தருமபுரி எம்.பி. ஆ.மணி கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் பிரதமரின் வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம்,சிறு குறு தொழில் முனைவோருக்கு தொழில் தொடங்க நிதி உதவி வழங்கும் வகையில் PMEGP திட்டத்தினை ஒன்றிய அரசு செயல்படுத்தி உள்ளதா?

கடந்த 3 ஆண்டுகளில் இந்த திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உருவாக்கபட்டுள்ள புதிய நுண் நிறுவனங்கள் மற்றும் அதன் மூலம் பயன் பெற்றுள்ள பயனாளிகளின் விபரங்கள் இதற்கென தமிழ்நாடு முழுவதும் மாவட்டம் வாரியாக வழங்கப்பட்டுள்ள நிதி மற்றும் மானியம் குறித்த விபரங்கள் என்ன?

குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் இந்த திட்டத்தின் மூலம் பயன் பெற்ற தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களின் எண்ணிக்கை மேலும் வழங்கப்பட்டுள்ள மொத்த கடனுதவி மானியங்கள் குறித்த விபரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் தகுதியான தனி நபர்கள், பழங்குடியின பெண்கள் மற்ற பின் தங்கிய குழுவினரை ஊக்குவிக்கும் வகையில் இத்திட்டம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்றும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இணையமைச்சர் ஷோபா கரண்ட்லஜே விடம் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.

புயல் மழையால் வீட்டு மேற்கூரை விழுந்த

# திருவொற்றியூர் குப்பத்தில் பாதிக்கப்பட்டாருக்கு நிவாரணப் பொருட்கள்!

## கே.பி. சங்கர் ரூ.50 ஆயிரம் நிதி உதவி வழங்கினார்

சென்னை, டிச. 5 -

சென்னை - திருவொற்றி யூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவொற்றியூர் குப்பத்தில் வசித்து வரும் சந்தோஷ் சுனிதா, திரு. தவமணி அமுதா ஆகியோரின் வீடு டித்வா புயல் காரணமாக பெய்த கன மழையில் வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்த தகவல் அறிந்து இன்று திருவொற்றியூர் வட்டாட்சியர் திருமதி . சகாயராணி, வட்ட கழக செயலாளர் எம்.எல்.சரவணன் ஆகியோருடன் மாநில மீனவரணி துணைத் தலைவர், திருவெற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் பாதிக்கப்பட்டவர்களின் இல்லம் சென்று 25 கிலோ அரிசி, பாய், தலையனை, பெட்ஷீட், உடைகள் என அத்தியாவசிய பொருட்களுடன் தலா ரூ.25,000 வீதம் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் ரூ.50,000 வழங்கினார்.

அருகில் இருந்த வயது முதிர்ந்த திருமதி. பாக்கியம் அம்மாள் அவர்கள் புயல் காரணமாக செய்வதறியாது தவிப்பதாகவும் தனக்கு உதவிட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார் அவரின் கோரிக்கையை ஏற்று உடனடியாக ரூ.5000 வழங்கினார்.

மேலும் அரசு சார்பில் உரிய நிவாரணம் விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வட்டாட்சியர் அவர்களிடம் அறிவுறுத்தினார், இந்நிகழ்வில் கழக உடன்பிறப்புகள் மற்றும் கிராம நிர்வாகிகள் உடன் இருந்தனர்

# சென்னை தென் மேற்கு மாவட்ட கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்,எல்,ஏ, அறிவிப்பு!



சென்னைதென்மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் 06.12.2025 சனிக்கிழமை அன்று காலை, மாலை சிபி ராமசாமி சாலையில் உள்ள சட்டமன்ற அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் அ.சந்திரசேகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே, இக்கூட்டத்தில், காலை 11.00 மணி அளவில் மாவட்ட நிர்வாகிகள், தொகுதிப் பார்வையாளர்கள், பகுதிச்செயலாளர்கள், வட்டச்செயலாளர்கள்.

மாலை 6.00 மணிக்கு மாவட்ட இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைப்பாளர், தொகுதி அமைப்பாளர்கள். ஆகியோர் தவாறமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக இளைஞர் அணி மண்டல மாநாடு சம்மந்தமாக மற்றும் கழக ஆக்க பணிகள்

**மயிலை த.வேலு எம்.எல்.ஏ.**

செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.

தொடர் மழை காரணமாக பள்ளிக்கரணை ஏரி –

# சோழிங்கநல்லூர் தொகுதியில் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. ஆய்வு!

சென்னை, டிச. 5 -

சென்னை தெற்கு மாவட்டம் - சோழிங்கநல்லூர் தொகுதியில் டித்வா புயலின் காரணமாக கடந்த 4 நாட்களாக பெய்து வரும் மழையால் தாழ்வான பகுதிகளில் மழை நீர் எங்கும் தேங்காத வண்ணம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் கண்ணகிநகர், செம்மஞ்சேரி, பெருங்குடி, கல்லுக்குட்டை, பள்ளிக்கரணை உள்ளிட்ட பகுதிகளில் .அதிகாரிகளுடன சென்று ஆய்வு செய்தார்.

சோழிங்கநல்லூர் தொகுதி பள்ளிக்கரணை நாராயணபுரம் ஏரியில் வடகிழக்கு பருவமழையால் ஏரியின் உபரி நீர் முழு கொள்ளளவு எட்டியுள்ள நிலையில் இரண்டு கண் கொண்ட கூடுதல் வடிக்கால்வாய்யில் தண்ணீர் தேங்காமல் வெளியேறி வருவதை 3 - 12 - 2025 அன்று சோழிங்கநல்லூர் மத்திய பகுதிச் செயலாளரும் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ச. அரவிந்த் ரமேஷ் , துணை ஆணையர் (தெற்கு) அஃதாப் ரசுல் ஆகியோர் பார்வையிட்டனர்.

அதுபோது வட்ட கழக செயலாளர்கள் வ.பாபு, எஃப். ஆரோன் (எ) அரசு, பகுதி துணைச் செயலாளர் வி.வி. குமரேசன், மாவட்ட பிரதிநிதி டி.தேவேந்திரன், எஸ்.செல்வகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர். மேலும் ஆங்காங்கே ஆய்வு செய்த போது அப்பகுதிகளில் உள்ள வட்டச் செயலாளர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் சென்றனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக கழக இளைஞரணி செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் அலமாதி ஊராட்சி கோவிந்தாபுரம் ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாபெரும் கைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். உடன் தமிழ்வாணன், கீதாராமன், பிரேமா, நா.பரசுராமன், ராஜசேகர், அசோக் சக்கரவர்த்தி, வாசு, ஆர்.சி.சிவசங்கர், மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை கிளை செயலாளர் கே.தமிழ் அழகன் ஏற்பாடு செய்தார்.



மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாநில அளவிலான ஆணழகன் போட்டி 19வது வட்டத்தில் நடைபெற்றது. வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் முன்னிலையில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் பரிசுகளை வழங்கி வாழ்த்தினார். கே ஏழுமலை, மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, எஸ்.உதயகுமார், ஜி. ராஜேஷ் கண்ணன், வி.சிவபிரகாஷ், வழக்கறிஞர் எம். என் தளபதி, ஆர். எம். டி. மோகன்ராஜ் உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.

தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி

# 131வது வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## வட்ட செயலாளர் மு.ம.செந்தில்குமார் அறிவிப்பு!

சென்னை, டிச.5-

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராய ர்நகர் கிழக்குப் பகுதி 131வது வட்ட தி.மு.க அவசர ஆலோசனை கூட்டம் இன்று (05.12.2025 வெள்ளிக்கிழமை) மாலை 06.00 மணிக்கு வட்ட அவை தலைவர் வி.டி.செல்வம் தலைமையில் மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் தியாகராய ர்நகர் சட்டமன்ற உறுப்பினர், கிழக்கு பகுதி கழக செயலாளர் ஜெ.கருணாநிதி, மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை, தொகுதி பார்வையாளர் ரத்னாலோகேஷ்வரன், பகுதி அவைதலைவர் மு.மணிவண்ணன், 131வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதிமணிவண்ணன் ஆகியோர்கள் கலந்துக் கொண்டு ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

ஆகையால் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.





திருவொற்றியூர் தொகுதி குப்பத்தில் வசித்து வரும் சந்தோஷ் சுனிதா, தவமணி அமுதா ஆகியோரின் வீடு டித்வா புயல் காரணமாக பெய்த கன மழையில் வீட்டின் மேற்கூரை இடிந்து விழுந்த தகவல் அறிந்து வட்டாட்சியர் சகாயராணி, வட்டச் செயலாளர் எம்.எல்.சரவணன் ஆகியோருடன் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. பாதிக்கப்பட்டவர்களின் இல்லம் சென்று 25 கிலோ அரிசி, பாய், தலையனை, பெட்ஷீட், உடைகள் என அத்தியாவசிய பொருட்களுடன் தலா ரூ.25,000 வீதம் ரூ.50,000 வழங்கினார். மேலும் அருகில் இருந்த வயது முதிர்ந்த பாக்கியம் அம்மாள் புயல் காரணமாக செய்வதறியாது தவிப்பதாகவும் தனக்கு உதவிட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார் அவரின் கோரிக்கையை ஏற்று உடனடியாக ரூ.5000 வழங்கினார். மேலும் அரசு சார்பில் உரிய நிவாரணம் விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வட்டாட்சியரிடம் அறிவுறுத்தினார், இந்நிகழ்வில் கழக உடன்பிறப்புகள் மற்றும் கிராம நிர்வாகிகள் உடன் இருந்தனர்